DECEMBER 2024 **U/ID 32417/UCX3A**

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. Define Financial Management.

   நிதியியல் மேலாண்மையின் இலக்கணம் தருக.

2. Mention any two objectives of financial management.

   நிதியியல் மேலாண்மையின் நோக்கங்கள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

3. What is trade credit?

   வணிக கடன் என்றால் என்ன?

4. State the patterns of capital structure.

   மூலதன அமைப்புகளை கூறுக.

5. Mention the different types of leverages.

   பல்வேறு வகையான ஆற்றலாதாயங்களை குறிப்பிடுக.

6. State the components of cost of capital.

   மூலதன அடக்கத்தின் கூறுகளை கூறுக.

7. How cost of capital can be classified?

   மூலதன அடக்கத்தின் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?

8. What is a stable dividend policy?

   நிரந்தர பங்காதாயக் கொள்கை என்றால் என்ன?

9. State any two advantages of stock dividend.

   ஊக்கப் பங்காதாயத்தின் நன்மைகள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

10. State the basic two conditions to be complied by a company for issue of bonus share.

    மிகை ஊதிய பங்குகளை வெளியிடுவதற்கான ஏதேனும் இரண்டு அடிப்படை கட்டுப்பாடுகளை தருக.

11. What is meant by permanent working capital?

நிரந்தர நடைமுறை முதல் என்றால் என்ன?

12. What are the different sources of working capital?

நடைமுறை மூலதனத்தைப் பெறும் பல்வேறு வழிமுறைகள் யாவை?

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. Explain the importance of financial management.

நிதி மேலாண்மையின் முக்கியத்துவத்தை விவரி.

14. From the following information, find out the capital structure :

	Rs.
Equity share capital	10,00,000
Preference share capital	5,00,000
Long term loans and debentures	2,00,000
Retained earnings	6,00,000
Capital surplus	50,000
Current liabilities	1,50,000
	25,00,000

கீழ்க்கண்ட விபரங்களிலிருந்து மூலதன அமைப்பைக் காண்க.

	ரூ.
சம உரிமைப் பங்கு மூலதனம்	10,00,000
முன்னுரிமைப் பங்கு மூலதனம்	5,00,000
வருவாய் கடன்கள் மற்றும் கடன் பத்திரங்கள்	2,00,000
வருவாய் வைப்புகள்	6,00,000
மூலதன உபரி	50,000
நடப்பு பொறுப்புகள்	1,50,000
	25,00,000

15. A company issues 10 years 8% debentures at Rs. 90 (face value Rs. 100). The marginal rate of interest applicable to the company is 50%.

Calculate cost of debt after tax.

ஒரு கம்பெனியானது 10 வருட 8% கடன்பத்திரத்தை ரூ. 90 க்கு வெளியிடுகிறது. (முக மதிப்பு ரூ. 100) கம்பெனிக்கான மாறுதல் வட்டி விகிதம் 50%.

வரிக்கு பிறகு கடன் அடக்கத்தை கணக்கிடுக.

16. The following is the capital structure of Shiva Ltd :

Source	Amount Rs.	Market Value Rs.	C/C
14% preference capital	2,00,000	2,30,000	14%
Equity capital	5,00,000	7,50,000	17%
16% debt	3,00,000	2,70,000	8%
Total	10,00,000	12,50,000	

Calculate the weighted average cost of capital.

சிவா நிறுமத்தின் மூலதன கட்டமைப்பு பின்வருமாறு :

மூலங்கள்	தொகை ரூ.	சந்தை மதிப்பு ரூ.	கிரயம்
14% முன்னுரிமை பங்குகள்	2,00,000	2,30,000	14%
சம பங்குகள்	5,00,000	7,50,000	17%
16% கடனீட்டு பத்திரம்	3,00,000	2,70,000	8%
மொத்தம்	10,00,000	12,50,000	

எடையிடப்பட்ட சராசரி மூலதன அடக்கத்தை புத்தக மதிப்பிலும் மற்றும் சந்தை மதிப்பிலும் கணக்கிடுக.

17. The earnings per share of a company is Rs. 8 and the rate of capitalization applicable is 10%. The company has before it an option of adopting (a) 50% and (b) 75% divided payout ratio. Compute the market price of the company's quoted shares as per Walter's model if it can earn a return of 15% on the retained earnings.

ஒரு நிறுமத்தின் பங்கு தலா வருமானம் ரூ. 8 மூலதனமாக்கல் விகிதம் 10% நிறுமத்தில் பின்வரும் வழிகள் உள்ளன.

(அ) 50% மற்றும் (ஆ) 75% பங்காதாயம் செலுத்தும் விகிதம் நிறும வைத்திருக்கும் வருமானத்தின் மீது 15% வருவாய் ஈட்ட முடியுமெனில் வால்டரின் முறையின்படி நிறுமத்தின் பங்குகளின் சந்தை நிலையைக் கணக்கிடுக.

18. Explain the various stages of working capital operating cycle.

பணி மூலதன இயக்க சுழற்சியின் பல்வேறு நிலைகளை விளக்குக.

19. From the following estimates, calculate the average amount of working capital required.

		Rs.
(a)	Average amount locked up in stock :	
	Stock of finished goods of W.I.P	10,000
	Stock of stores, materials etc	8,000
(b)	Average credit given :	
	Local sales 3 weeks credit	1,04,000
	Outside the state 5 weeks credit	3,12,000
(c)	Time available for payments :	
	For purchase 5 weeks	78,000
	For wages 3 weeks	2,60,000
(d)	Add 10% to allow contingencies	

கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்படி, சராசரி நடப்பு முதலை கணக்கிடவும்.

		ரூ.
(அ)	கச்சாப்பொருளில் சராசரி இருப்பு :	
	முடிவுற்ற சரக்கு மற்றும் முடிவுறா சரக்கு இருப்பு	10,000
	ஸ்டோர்ஸ், பொருள்கள் இருப்பு	8,000
(ஆ)	சராசரி கடன் கொடுத்தது :	
	உள்ளூர் விற்பனை 3 வார கடன்	1,04,000
	மாநிலத்தின் வெளியே 5 வார கடன்	3,12,000
(இ)	பட்டுவாடாக்குரிய நேரம் :	
	பொருள் வாங்குவதற்காக 5 வாரம்	78,000
	கூலிக்காக 3 வாரம்	2,60,000
(ஈ)	10% கூடுதலாக, தற்கால செலவுகளுக்காக	

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. Discuss the functions of financial management.

நிதியியல் மேலாண்மையின் செயல்பாடுகளை விவரி.

21. Explain the importance and significance of capital structure planning.

மூலதன கட்டமைப்பு திட்டமிடலின் முக்கியத்துவம் மற்றும் முக்கியத்துவத்தை விளக்கவும்.

22. Calculate the market price of a share of Pollard Ltd under :

(a) Walter's formula and

(b) Gordon model from the following data :

Earnings per share	Rs. 75
Dividend per share	Rs. 45
Cost of capital	15%
Rate of return on investment	18%
Retention ratio	4%

வால்டர் மற்றும் கார்டன் சூத்திரத்தைப் பயன்படுத்தி, பின்வரும் விவரங்களிலிருந்து போலார்டு நிறுமத்தின் பங்குகளின் சந்தை மதிப்பை கணக்கிடுக.

ஒரு பங்கின் வருவாய்	ரூ. 75
ஒரு பங்கின் பங்காதாயம்	ரூ. 45
மூலதன கிரயம்	15%
முதலீட்டின் மீது வருவாய்	18%
நிறுத்தி வைக்கப்படும் வருவாய்	4%

23. Discuss the merits and limitations of Walter's dividend model.

வால்டர்ஸ் டிவிடெண்ட் மாதிரியின் சிறப்புகள் மற்றும் வரம்புகள் பற்றி விவாதிக்கவும்.

24. From the following information, prepare a statement showing the working capital requirements :

Budgeted sales	Rs. 2,60,000 p.a.
Analysis of one rupee sales :	Rs.
Raw material	0.30
Direct labour	0.40
Overheads	0.20
Total costs	0.90
Profit	0.10
Sales	1.00

It is estimated that :

(a) Raw materials are carried in stock for 3 weeks and finished goods for 2 weeks.

(b) Factory processing will take 3 weeks.

(c) Suppliers will give 5 weeks credit.

(d) Customers will require 8 weeks credit.

கீழே அளிக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து நடப்பு மூலதனத்தைக் காட்டும் அறிக்கை ஒன்றைத் தயார் செய்க.

மதிப்பிடப்பட்டுள்ள விற்பனை (ஆண்டுக்கு)	ரூ. 2,60,000 p.a.
ஒரு ரூபாய் விற்பனையின் பகுப்பாய்வு :	ரூ.
மூலப்பொருள்	0.30
நேரடி உழைப்பு	0.40
மேலதிகச் செலவு	0.20
மொத்த அடக்கச் செலவு	0.90
இலாபம்	0.10
விற்பனை	1.00

(அ) மூலப்பொருள் 3 வாரங்களுக்கும், முடிந்த பொருள் 2 வாரங்களுக்கும் சரக்கிருப்பில் வைக்கப்படும்.

(ஆ) தொழிற்சாலை செயற்பாடு 3 வாரங்கள் நடைபெறும்.

(இ) சரக்களிப்போர் 5 வார கால கடன் அளிப்பர்.

(ஈ) கடனாளிகள் 8 வார கால கடன் கேட்பர்.

———————